IntSym 2019
9th International Symposium

# PROBLEMS FACED BY STUDENTS IN PURSUIT OF THE G.C.E. ADVANCED LEVEL: A STUDY BASED ON THE MUSLIM SCHOOLS OF BERUWELA DIVISIONAL SECRETARIAT

**M.S. Ismiya Begum[145], S.H. Aathif Ahamed[146], I. Saujan[147], & M.M.A. Abdullah[148]**

Correspondence: izzahis123@gmail.com

ABSTRACT

It is an expected notion that an educated individual would create exemplary citizens of good personality development, significant cognitive ability, and fulfilment of social duties as well as other similar positive traits. As the foundation is formed at the school level, a considerable amount of funding allocated for nations education policies is dispersed for the enhancement and development of school education system. Schools have developed themselves through this initiative with better access to resources and at the same time, raising their quality. This measure has resulted in eagerness of students to continue their studies to an advanced level. Nonetheless, various problem faced by the students has formed a barrier and proves to be a challenge for them to continue to an advanced level of education. With this in mind, this research focuses on the problems faced by the students of the Muslim schools, under the purview of Beruwela Divisional Secretariat, in continuing their G.C.E Advanced Level. The main objective of this research is to identify the students' preference towards learning as well as the problems faced by them in continuing their education at these schools. Primary data was collected through interviews and distribution of 160 questionnaires. Secondary data were collected from journal articles, books and educational materials. A statistical analysis of the data collected was completed using SPSS software. The research indicated that the majority of the students are keen on continuing their studies. However, a number of problems faced by them include lack of attention from the teachers, lack of employment opportunities for educated individuals, family's' economic situations and standard of living as well as the time-consuming distance between school and home.

**Keywords:** Beruwela area, G.C.E. Advance Level, students, problems

ஆய்வுச் சுருக்கம்

கல்வியினூடாக தனிநபர் ஆளுமை விருத்தி, அறிவுத்திறன், சமூகமயமாக்கல் செயற்பாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட நற்பிரஜைகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் முதன்மைப்பணி பாடசாலை மட்டத்தில் இருந்து ஆரம்பிப்பதனால் நாட்டின் கல்விக் கொள்கையில் பாடசாலைக் கல்விக்கென பெரும்பகுதி நிதி ஒதுக்கப்படுகின்றது. அதனூடாக பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டும் போதிய வளங்கள் வழங்கப்பட்டும் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இதனால் மாணவர்களும் உயர்தரம் வரை கற்பதில் ஆர்வம் செலுத்திவருகின்றனர். மறுதலையாக, அவர்கள் எதிர்கொள்ளும் பல்துறைசார் பிரச்சினைகள் அவர்களின் தொடர்தேர்சையான கற்றலுக்கு தடையாக இருந்து வருகின்றமையால் உயர்தரம் வரை கல்வியைத் தொடர்வதும் பெரும் சவாலாக மாறிவருகின்றது. குறிப்பாக, ஆய்வுப் பிரதேசமான பேருவலைப் பிரதேசத்தில் இது முக்கிய பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளமையால் பேருவலைப்பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள முஸ்லிம் பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் கல்வியை தொடர்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் மீதான விருப்பு நிலையை கண்டறிவதும் அவர்களின் தொடர் கற்றலில் ஏற்பட்டுள்ள தடைகளை இனங்கான்பதும் இவ்வாய்வின் பிரதான நோக்கங்களாகும். இவ்வாய்வுக்கான தகவல்கள் நேர்காணல், வினாக்கொத்து போன்ற முதல் நிலைத் தரவு மூலங்களில் இருந்தும் இத்தலைப்புடன் தொடர்பான நூல்கள்,

[145] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
[146] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
[147] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.
[148] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

ஆய்வறிக்கைகள், கல்வி தொடர்பான ஆக்கங்கள் போன்ற இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்தும் திரட்டப்பட்டிருந்தன. திரட்டப்பட்ட தகவல்கள் SPSS எனும் மென்பொருளின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு புள்ளிவிபரவியல் நுட்ப முறைகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. பெரும்பான்மையான மாணவர்கள் உயர்தரத்தில் கல்வி பயில்வதில் விருப்பம் கொண்டுள்ளனர் என்பதும் மாணவர்கள் உயர்தரத்தில் கல்வியைத் தொடர்வதில் ஆசிரியர் பற்றாக்குறை, கல்வி கற்றோருக்கு வேலைவாய்ப்பின்மை, குடும்பங்களில் நிலவும் பொருளாதார பிரச்சினை, பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையிலான அதிக தூரம் போன்றன பிரதான பிரச்சினைகளாக கண்டறியப்பட்டன.

***Key Words:*** பேருவலைப் பிரதேசம், க.பொ.த உயர்தரம், மாணவர்கள், பிரச்சினைகள்

## அறிமுகம்

மாணவர்கள் தமது ஆளுமைத்திறன்களையும், அறிவுத்திறன்களையும் விருத்திசெய்து கொள்வதிலும் சமூகமயமாக்கல் செயன்முறைகளில் ஈடுபடுவதிலும் பாடசாலைக் கல்வி முக்கிய பங்காற்றுகின்றது. எதிர்காலத்தில் நற்பிரஜைகளை உருவாக்கி சமூகத்திற்கு பயனளிக்கும் தனிநபர்களை உருவாக்குவதே கல்வியின் பிரதான இலக்காகும். எனவே “தனிநபருக்குத் தேவையான அறிவை வழங்குவதுடன், தனிநபரின் உடல், உள, மனவெழுச்சி, சமூக இணக்கம், நடத்தை, ஆளுமை, விழுமியம் என்பவற்றை விருத்தி செய்யும் முகமாக அனுபவத்தை வழங்கி சமூகத்தோடு இயைபுபடுத்தும் செயற்பாடு கல்வியாகும்.” (யேசுஜயா டிலானி, 2018) இந்த இலக்கினை நிறைவேற்றும் பிரதான பணி பாடசாலை மட்டத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது என்ற அடிப்படையில் ஒவ்வொரு தனிநபரும் பாடசாலைக்கல்வியைத் தொடர்வது கட்டாயம் என்ற நிலைப்பாட்டினையும் தாண்டி அது தனிமனிதனுக்குரிய உரிமையாகவும் மதிக்கப்படுகின்றது. (சர்வேஸ்வரன்,2004.P:139) அதே நேரம் ஒரு நாட்டின் அபிவிருத்தி குறிகாட்டிகளில் ஒன்றாக கல்வி கருதப்படுகின்றது. இது பாடசாலை மட்டத்தில் இருந்து தொடர்வதனால்தான் உலகின் அனைத்து நாடுகளிலும் பாடசாலைக்கல்வி முதன்மைப்படுத்தப்பட்டு அதற்காக ஏராளமான நிதிகளும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டின் கல்விக் கொள்கையைப் பொறுத்தும் இது மாறுபடுகின்றது. இந்த வகையில் இலங்கையின் கல்வித் திட்டத்தில் பாடசாலைக் கல்விக்காக ஒதுக்கப்படும் வருடாந்த நிதி 30,300.9 மில்லியன் ஆகும். இது கடந்த வருடம் 1.5% ஆக மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (Annual report, Ministry of education-2018).

இலங்கையின் கல்வி முறையை முதன்மை நிலை (Primary) நடுத்தர நிலை (Junior Secondary Level), மூத்த இரண்டாம் நிலை (Senior Secondary Level), பிந்தைய இரண்டாம் நிலை (General Certificate of Education (G.C.E) Ordinary Level (O/L), உயர்தரம் (G.C.E Advanced Level) என வகைப்படுத்தலாம். (Historical Overview of Education in Sri Lanka, 2007)

ஒரு மாணவன் 14 வயது (தரம் 9) வரை கட்டாயக் கல்வியைப் பெறவேண்டும். ஏனைய தரங்கள் அவனது விருப்பத்திற்குரிய தெரிவாக இருந்த போதும் தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கான ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக கல்விப் பொதுத்தராதர சாதராரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் கொள்ளப்படுகின்றன. 1980ம் அண்டுகளுக்கு முன்னர் தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்குரிய ஓர் தகைமையாக இது கருதப்பட்ட போதும் அதன் பின்னரான கல்விக் கொள்கையில் தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கான ஆரம்ப தகைமையாக உயர்தரம் கருதப்பட்டது. (Annual Performance report, Ministry of Education-2017) ஆனால் இன்றைய சூழ்நிலையில் பட்டப்படிப்பினைப் பூர்த்தி செய்திருப்பது பெரும்பாலான அரசதொழில் வாய்ப்புக்களுக்கான தகைமையாகக் கருதப்படுகின்றது. பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கும் அனுமதி கிடைக்கப்பெறாதவர்கள் வெளிவாரிக்கற்கை நெறிகளைத் தொடர்வதற்கும் மாத்திரமன்றி சில தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் உயர்தரம் வரை கல்வி கற்றல் அவசியமானதொன்றாக காணப்படுகினறது. இதனால்தான் தொழில்வாய்ப்புக்களைக் கருத்திற் கொண்டு இலங்கை அரசு வருடா வருடம் கல்வி அமைச்சின் ஊடாக புதிய கல்வித்திட்டங்களை அறிமுகம் செய்வதிலும் பாடசாலைகளின் தரங்களை உயர்த்துவதிலும் அதிகளவிலான நிதியினைச் செலவிடுகின்றது.

அண்மைக்காலங்களில் மாணவர்கள் தங்கு தடையின்றி கல்வியைத் தொடர்வதற்கான பௌதீக வளங்கள், போதிய அளவிலான நவீன மயப்படுத்தப்பட்ட கற்றல் உபகரணங்கள், கற்றல் சூழல், தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் என பல வாய்ப்புக்களும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்ற போதிலும் மறுதலையாக, மாணவர்கள் கல்வியில் ஆர்வமின்மை, பாடசாலை இடைவிலகல் என்பனவும் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக ஆரம்ப கல்வியை விட உயர்தரக் கல்வியின் மீதான நாட்டம் இனவேறுபாடின்றி அனைத்து சமூகங்கள் மத்தியிலும் குறைந்து வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்த அடிப்படையில் ஆய்வுக்குட்டபடுத்தப்பட்ட பேருவலைப்பிரதேசத்தைப் பொறுத்தவரை இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பகால குடியேற்றம் முதன் முறையாக உருவாகியதாக கருதப்படும் இப்பிராந்திய முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் ஓர் வர்த்தக சமூகமாகவே தங்களை அடையாளப்படுத்துவதில் பெருமிதம் அடைந்து வந்திருக்கிறார்கள். (Ameen,2000.p:235) இதற்கு அரேபியரின் பண்டைய வணிகத்தொடர்புகள் காரணமாக இருந்திருக்கலாம். என்ற போதும் 19ம் நூற்றாண்டில் இலங்கையில் படித்த சில புத்திஜீவிகள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு முஸ்லிம் பாடசாலைகள் உருவாக வழியமைத்தது. இந்த அடிப்படையில் இப்பிரதேசத்தில் சுமார் 08 முஸ்லிம் பாடசாலைகள் உள்ளன. அவற்றுள் க.பொ.த உயர்தர பாசாலைகள் 06 ஆகும். பெரும்பாலான பாடசாலைகள் அண்மைக்காலமாக உயர்தரம் வரை தரம் உயர்தப்பட்டும் கற்றல், கற்பித்தல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டும் வரும் நிலையில் ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் கல்வியைத் தொடர்வதில் மாணவர்கள் விருப்புக் கொண்டுள்ள போதிலும் அதனை தொடர்வதில் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் பல்கலைக்கலகத்திற்கு தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆய்வுப் பிரதேசத்தில் குறைவடைந்து வருகின்றது. இப்பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு க.பொ.த உயர்தர மாணவர்களின் தொடர்கற்றலில் தடையை எற்படுத்தியுள்ள பாசாலைசார், சூழல்சார், பொருளாதாரம் சார், உளவியல் சார் பிரச்சினைகளை கண்டறிவதனை இவ்வாய்வு இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுவாக பாடசாலை மாணவர்களின் இடைவிலகளுக்கான காரணங்கள், இளமானி கற்கை நெறியைத் தொடர்வதில் மாணவர்கள் கற்றல் சூழலில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தொடர்பான ஆய்வுகளும், சில பொதுவான கல்வி ஆய்வுகளும் இடம்பெற்றுள்ளபோதும் க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்பதில் மாணவர்கள் ஆர்வம் காட்டாமைக்கான காரணங்களை மையப்படுத்திய ஆய்வுகளோ குறிப்பிட்ட ஆய்வுப்பிரதேசத்தை மையப்படுத்திய இது தொடர்பான கல்வி ஆய்வுகளோ இதுவரை இடம்பெறவில்லை. இவ்விரு இடைவெளிகளையும் பூணப்படுத்துவதில் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது.

இவ்வாய்வானது பேருவலைப்பிரதேச செயலகத்திற்குட்டபட்ட உயர்தரம் வரை உள்ள முஸ்லிம் பாடசாலைகளையும் உயர்தரத்தில் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கும், உயர் தரத்தில் இருந்து இடைவிலகிய மாணவர்களையும் மாத்திரம் மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கங்கள்** க.பொ.த உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் மீதான விருப்பு நிலையை எண்ணிக்கை அடிப்படையிலும் பால் அடிப்படையிலும் இனங்காணல்.

1. மாணவர்களின் தொடர்கற்றலில் தடைகளை ஏற்படுத்தியுள்ள பாடசாலை சார், சூழல் சார், உளவியல் சார், பொருளாதாரம் சார் பிரச்சினைகளைக் கண்டறிதல்.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் (Qualitative) முறையிலான ஆய்வு முறையாகும். இவ்வாய்வுக்காக வினாக்கொத்து, நேர்காணல் முறை போன்ற முதலாம் நிலைத் தரவு மூலங்களும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக ஆய்வுடன் தொடர்பான நூல்கள், ஆய்வறிக்கைகள், கல்வி தொடர்பான ஆய்வுகள் மூலம் திரட்டப்பட்டுள்ளன. ஆய்வுப்பிரதேசத்தின் க.பொ.த உயர்தரம் வரையுள்ள 6 முஸ்லிம் பாடசாலைகளிலிருந்து எழுமாறாக 4 முஸ்லிம் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் உயர்தரத்தில் கல்வி பயிலும், உயர் தரத்தில் இருந்து இடைவிலகிய மாணவர்களில் இருந்து எழுமாறாக 40 பேர் செய்யப்பட்டு மொத்தமாக 160 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அவற்றுள் பூரணப்படுத்தப்பட்ட 154 வினாக்கொத்துக்களில் இருந்து தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. உயர் தரத்தில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்களில் சிலரும் உயர்தரத்தில் இருந்து இடைவிலகிய மாணவர்களில் சிலரும் பாடசாலை ஆசிரியர்களும், அதிபர்களும் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன. திரட்டப்பட்ட தரவுகள் SPSS எனும் மென்பொருளின் துணையுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு வரைகலை விளக்கங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

பேருவலைப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்டபடுத்தப்பட்ட நான்கு பாடசாலைகளில் இருந்தும் தற்போது உயர்தரம் வரைகல்வி பயிலும், உயர்தரத்தில் இருந்து இடைவிலகிய மாணவர்களில் ஒரு பாடசாலையில் இருந்து 40 பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 160 வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டன. அவற்றில் 96% (154 வினாக்கொத்துக்கள்) பூரணப்படுத்தப்பட்டிருந்தன. அதனை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

*Table: 1. (Collected Questionnaires)*

| | | Preferred Status In Education | Problems Faced By School | Environmental Problems | Phycology Problems | Economic Problems |
|---|---|---|---|---|---|---|
| N | Valid | 154 | 154 | 154 | 154 | 154 |
| | Missing | 0 | 0 | 0 | 0 | 0 |

***Source: Survey Data***

1. **கல்வியை தொடர்வதில் மாணவர்களின் விருப்பு நிலை எண்ணிக்கை, பால்அடிப்படையில்**

உயர்தரத்தில் கல்வி கற்பதற்கான மாணவர்களின் விருப்பு நிலையைப் பரீட்சித்த போது 86% மானோர் உயர்தரக் கல்வியினைக் கற்பதற்கு விருப்பம் கொண்டுள்ளனர் எனவும் 14% மானோர் விருப்பமின்மையைக் கொண்டுள்ளமையையும் அறிய முடிந்தது. அவர்களில் 71%மானோர் பெண்களும் 19% மானோர் ஆண்களுமாவர். அவற்றை பின்வரும் வரைபடங்கள் காட்டுகின்றன.





*Figure: 1 (Willing of Student)*





*Figure: 2 engaging enthusiastically in Education gender wise*

**2. கல்வியை தொடர்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள்**

க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயில்வதற்கு கூடுதலான மாணவர்கள் விருப்பம் கொண்டிருந்த போதிலும் கல்வியைத் தொடர்வதில் அவர்கள் பாடசாலைசார், சூழல்சார், உளவியல்சார், பொருளாதாரம்சார் என பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

**I. பாடசாலைசார் சவால்கள் (Challenges Faced By School)**





*Figure: 3.(Challenges faced by School)*

மாணவர்கள் எதிர்நோக்கும் பாடசாலை சார் பிரச்சினைகளை எடுத்து நோக்கும் போது ஆய்வுப்பிரதேசத்தில் உயர்தர மாணவர்களின் கற்றலை தொடரமுடியாமைக்கு ஆசிரியர் பற்றாற்குறை பிரதான பிரச்சினையாக கண்டறியப்பட்டது. ஆய்வுப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் மொத்தமாக உயர்கல்வியை தொடரும் மாணவர்களின் எண்ணிக்கை 437 ஆகும்.

இங்கு உயர்தரக்கல்விக்குப் பொறுப்பாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 32 மாத்திரமே ஆகும். அதிலும் குறிப்பாக விஞ்ஞானம், கணிதம் போன்ற துறைகளில் ஆசிரியர் வெற்றிடம் இருப்பதை கள ஆய்வின் போது அவதானிக்க முடிந்தது. ஆய்வுக்குட்படுத்தியோர்களில் 62.33% மானவர்கள் இக்காரணத்தைக் குறிப்பிட்டனர். மேலும்,பாடசாலைகளில் நிலவும்

இறுக்கமான நிர்வாகம் உயர்தர மாணவர்களின் கற்றலில் மிகக் குறைந்த (1.9%) தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## II. சூழல்சார் பிரச்சினைகள் (Environmental Challenges)





*Figure:4 Environmental challenges*

மாணவர்கள் தமது தொடர் கற்றலில் ஆர்வம் காட்டாமைக்கான சூழல்சார் பிரச்சினைகளில் கல்வி கற்றவர்களுக்கிடையே தொழிலின்மையை பிரதான பிரச்சினையாக பெரும்பான்மையானோர் (52.60%) குறிப்பிட்டனர். இப்பிராந்தியத்தில் உயர்தரம், பட்டப்படிப்பு வரை கல்வி கற்றவர்களில். 60வீதமானோர் இதுவரை எவ்வித வேலைவாய்ப்பும் அற்றவர்களாக உள்ளனர். (3.25%) மானோர் பெற்றோர்கள் பாடசாலைகள் மீது நம்பிக்கை இலத்தல்லையும், ஏனையவற்றில் (27.27%) மானோர்கள் இளவயதில் திருமணத்தையும், (16.88%) ஆனோர் வீட்டுக்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரத்தினையும் காரணங்களாக குறிப்பிட்டனர்.

## III. உளவியல்சார் பிரச்சினைகள் (Psychological Challenges)





*Figure:5 (Psychological challenges)*

மேலும், கல்வியைத் தொடர்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் உளரீதியான பிரச்சினைகளை பகுப்பாய்வுக்குறப்படுத்திய போது அதிகமான மாணவர்கள் (35.06%) பாடங்களில் அல்லது ஆசிரியர்கள் மீது ஏற்பட்டுள்ள வெறுப்பினையும் குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் (8.44%) பரம்பரைத் தொழிலில் ஆர்வம் கொண்டுள்ளமையையும் தெரிவு செய்துள்ளனர்.

கல்வியை தொடர்வதில் மாணவர்கள் எதிநோக்கும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளை ஆய்வுக்குறப்படுத்திய போது அதிக எண்ணிக்கையான மாணவர்கள் (61.04%) பொருளாதாரப் பிரச்சினையைக் எதிர்கொண்டுள்ளதுடன் (4.55%) மான மாணவர்கள் பெற்றோர்களின்

## IV. பொருளாதாரம்சார் பிரச்சினைகள் (Economical Challenges)





*Figure:6 (Economical Challenges)*

பொருளாதார ஆதரவு கிடைக்காமை மற்றும் பெற்றோரின் கவனயீனம் காரணமாக கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ளனர். ஆய்வுக்குட்படுத்திய மாணவர்களில் 55% மானோரின் குடும்ப வருமானம் ரூபாய் 20,000 தொடக்கம் 25,000 ஆக இருப்பது இதற்கான காரணமாக கண்டறியப்பட்டது.

**கண்டறிதல்கள்**

- ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குட்டுபடுத்திய மாணவர்களில் 86% மானோர் உயர்தரத்தில் கல்விபயில ஆர்வம் கொண்டுள்ளனர். இருப்பினும் அவர்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் உயர்தரத்தில் கல்வியை தொடர்வதற்கு தடையாக உள்ளன.
- அவர்களுள் உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு அதிக விருப்பமுடையொர் பெண்களாவர். இது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர் தொகையில் 71% ஆகும்.
- பேருவலைப் பிரதேசத்தில் உயர்தரத்தில் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் தடையாக பாடசாலை சார், சூழல் சார், உளவியல்சார், பொருளாதாரம் சார், பிரச்சினைகள் செல்வாக்கு செலுத்தியுள்ளன.
- மாணவர்கள் எதிர்கொண்டுள்ள மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றிலும் பாடசாலை சார்ந்த பிரச்சினைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பிரதான காரணமாக

இனங்கானப்பட்டுள்ளது. 96% மான மாணவர்கள் ஆசிரியர் பற்றாக் குறை காரணமாக உயர்தர கல்வியை தொடர்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

- பொருளாதாரம் சார்ந்த பிர்சினைகளில் குடும்பத்தின் பொருளாதாரப் பிரச்சினையும் (61.04%), கல்வி கற்ற மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பினைப் பெற முடியாமை (52.60%) சூழல் சார் பிரச்சினைகளில் முதன்மைக் காரணியாகவும் இனங்கானப்பட்டன.
- மாணவர்கள் எதிர்கொண்டுள்ள உளவியல் சார் பிரச்சினைகளில் (35.06%) பாடங்களில் அல்லது ஆசிரியர்கள் மீது எற்பட்டுள்ள வெறுப்பு பிரதான காரணமாக கண்டறியப்பட்டது.
- ஆய்வுக்குட்டபடுத்தப்பட்ட அனைத்து பிரச்சினைகளிலும் மொத்தமாக நோக்குகின்ற போது இப்பிரதேசத்தில் மாணவர்கள் உயர்தரக் கல்வியில் ஈடுபாடின்மை காட்டுவதற்கு ஆசிரியர் வளப்பற்றாக் குறையே பிரதான காரணமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

## முடிவுரை (Conclusion)

ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் உயர்தரத்தில் மாணவர்களின் கல்விமீதான விருப்பு அதிகரித்து காணப்பட்ட போதிலும் அதனை தொடர்வதில் அவர்கள் எதிர்கொண்டு வருகின்ற பாசாலைசார், சூழல்சார், பொருளாதாரம்சார், உளவியல்சார் பிரச்சினைகள் தடைகளாக அமைவதுடன். இதனால் உயர்கல்விக்கு தகுதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆய்வுப் பிரதேசத்தில் குறைந்துகொண்டு செல்கின்றது. இதனை நிபர்த்திசெய்யும் முகமாக முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை குறிப்பிட்ட தரப்பினர் முன்னெடுத்தால் இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்ய முடியும்.

## ஆலோசனைகள் (Recommendation)

- ஆய்வுக்குறபடுத்தப்பட்ட பாடசாலைகளின் மாணவர்கள் உயர்கல்வியை தொடர்வதில் எதிநோக்கும் பாடசாலைசார், சூழல்சார், உளவியல்சார், பொருளாதாரம்சார், பிரச்சினைகளை தெளிவுபடுத்தும் முகமாக இவ்வாய்வினை பிரதேச கல்விப்பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோரிடம் சமர்பித்தல்.
- ஆசிரியர் வளபற்றாட்குறையினை நிபர்த்தி செய்யும் முகமாக புதிய ஆசிரியர்களை நியமனம் செய்தல்.
- ஆய்வுப்பிரதேச பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு Student Psychology, Teaching Methodology போன்ற துறைகளில் தெளிவூட்டும் முகமாக கருத்தரங்குகளை நடாத்துதல்.
- புாடசாலைக் கல்வியை தொடர்வதில் பொருளாதார இடர்பாடுகளை எதிநோக்கும் மாணவர்களுக்கு ஊரின் தனவந்தர்கள் மூலமாக அல்லது சமூகநல சங்கங்கள் மூலமாக உதவிகரங்களை நீட்டல்.
- பாடசாலைகளின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக மாணவர்களின் அடைவறிக்கைகளை பெற்றோரிடம் வழங்கி மாணவர்களின் அடைவினை எதிர்காலத்தில் உயர்துவதற்குத் தேவையான ஆலோசனைகனை வழங்கள்.

## உசாத்துணைகள் (References)

Sumathipala,K.H.M. (1968). *History of education Ceylon.* Dehiwala: Tisara prakasakayo Prints.

அஸீஸ்,எ.எம்.எ. (2007). *இலங்கையில் இஸ்லாம்.* கொழும்பு: குமரன் அச்சகம்.

தேவராஜா,எம. (2019). *பாடசாலை இடைவிலகலும் இலங்கையில் சிறுவர் உரிமையும்.*

அமீன், எம்.ஐ.எம்.(2000). *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும்.* ஹெம்மாதகம: அல்ஹஸனாத் பதிப்பகம்.

கருணாநிதி, எம். (2004). *பேராசிரியர் சோ.சந்திரசேகரம் மணிவிழா மலர்.* கொழும்பு-4: குமரன் அச்சகம்.

நஹியா, ஏ.எம்.(2018). *இலங்கை முஸ்லிம் கல்வி: மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்.* அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு :குமரன் அச்சகம்.

ஜலால்தீன், எம். எஸ். எம். (2016), *சுதந்திரத்திற்குப்பின் இலங்கை முஸ்லிம் கல்வி: பல்கலைக்கழக அனுமதி பற்றிய மதிப்பீடு,* நான்காவது சர்வதேச மாநாடு, இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழிபீடம்: தென்கிழக்குப்பல்கழைக்கழகம்.

பேகம், ஏ. ஆர் எப். (2016*), கிழக்கு மகாண முஸ்லிம் பெண்களின் கல்வி நிலை: விசேட ஆய்வு கோரளைப்பற்று மேற்கு,* நான்காவது சர்வதேச மாநாடு, இஸ்லாமிய கற்கைகள் அறபு மொழிபீடம்: தென்கிழக்குப்பல்கழைக்கழகம்.

*Annual performance report -2017*. ((2018*),* Ministry of Education.